RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt22134

OPEN ACCESS

# வண்ணதாசன் படைப்பில் வெளிப்படும் எதிர்மறை விழுமியங்கள்

அ. சாந்தி ராணி [அ, *], சா. சுஜாதா

[அ] மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, ஜி.டி.என். கலைக்கல்லூரி, (தன்னாட்சி) திண்டுக்கல்-624005 தமிழ்நாடு, இந்தியா

# Negative values expressed in Vannadasan's work

A. Shanthi Rani [a, *], S. Sujatha [b]

[a] Madurai Kamaraj University, Madurai, TamilNadu, India

[b] Department of Tamil, G.T.N Arts College (Autonomous), Dinidgul-624005, TamilNadu, India

* Corresponding Author: christo1619@gmail.com

Received: 25-10-2021
Revised: 06-01-2022
Accepted: 16-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

Tamil literature has a continuity of more than two thousand years. Literature is the gateway to the present and the future for oneself and one's own society. It helps to know the past society and living conditions. Creativity can convey the ideas people need or people's thoughts. The experience a person gets while learning such creativity sometimes causes positive thoughts and negative thoughts. Learning to think and act positively is essential to change negative situations. Only a man who has seen many failures can create a steady path of success. In this situation, Vannadasan is a great creator who is moving forward in life by taking positive experiences from fellow human beings. If one wants to excel as a high man, it is better that the thoughts that appear in the heart also be high. One should agree with the people living in the society with affection and attachment. It is known in the way of Vannadhasan's work that when we help each other and understand each other's feelings, relationships improve and we act in such a way that the values are identified by us.

**Keywords:** Vannadasan, Thoughts, Relationships, Society

## முன்னுரை

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் மானுடம் என்கின்ற பொதுவில் அடக்க முடியும் எனினும் மனிதனின் செயல்பாடுகளை உற்றுநோக்கினால் ஒவ்வொருவரிடமும் தனித்துவமான நடத்தை முறைகளும், இயல்புகளும் காணப்படுகின்றன. மாறிக்கொண்டே இருக்கின்ற காலச்சூழ்நிலையில் மனிதனின் உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மாற்றமானது மனிதர்களின் மனிதநேயத்தை குறைத்துக் கொண்டு வருகின்றது. சுயநலத்துடன் மனிதன் வாழ்வதற்கு இது அடிப்படையாக அமைய ஆரம்பிக்கின்றது. நவீனத் தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளராகத் திகழ்பவர் வண்ணதாசன். வண்ணதாசன் இன்றைய நாகரீக உலகிற்கு ஏற்றவகையில் தன் கருத்துக்களைப் பதிவு செய்து கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் மனித வாழ்க்கையில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளையும் எதார்த்த வாழ்க்கையைப் பற்றியும் அழகாகச் சித்தரித்துக் கொண்டிருக்கிறார் உண்மையில் எளியவாழ்வு, உயர்ந்த சிந்தனை, மனிதநேயம், நல்லொழுக்கம், மனித விழுமியப் பண்புகளை வாழ்வில் கடைபிடித்து வாழ்தல் என்பனவே மனிதனின் மதிப்பை உயர்த்த வல்ல சாதனமாகவும் இருக்கும். இச்சூழ்நிலைகளைச் சமாளித்து நாம் நம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது பற்றியும் நம்மில் ஏற்படும் எதிர்மறையான நிகழ்வுகள் சில

நேரங்களில் நன்மையில் முடிவடைவதையும் வண்ணதாசன் படைப்புகள் வழி அறியப்படுவதாக இக்கட்டுரையானது அமைகின்றது.

## விழுமியம் - பொருள்

Values என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "மதிப்பு" என்று பொருள் கூறுவர். Values என்ற சொல்லிற்கு நிகரான சொல் மிகச் சில மொழிகளிலேயே காணப்படுகிறது. அறிவியல் மதிப்பையும், மனதின் மதிப்பையும் ஒப்பிட்டு அறியவும் பயன்படுகிறது. மதிப்பீடு என்ற சொல் "Evaluation" என்ற சொல்லில் குறிப்பிடப்படுகின்றது. இதையே விழுமியங்கள் என்று மொழி பெயர்க்கின்றனர். விழுமியம் என்ற சொல் உயர்ந்த, சிறந்த, மதிப்பான, என்ற பொருள்களில் சங்க இலக்கியங்களில் குறிப்பிடுகின்றனர்.

இலக்கியத்தில் காணப்படும் "விழுமியம்" என்ற சொல்லுக்கு பலவித பொருள்கள் உள்ளன. விழுமப்பொருள் என்பது நுண்ணிய பொருள், மேன்மையான பொருள், இடும்பை, சீர்மை, தூய்மை, விழுமம், சிறப்பு, நன்மை என்று பல பொருளைத் தருகின்றது. விழுமியம் என்ற சொல்லானது முதன்முதலில் தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றில் தான் மொழியப்பட்டது.

விழுமியத்தின் அவசியத்தைப் பற்றியும் அவை நம் வாழ்வில் ஏற்படுத்துகின்ற மாற்றங்கள் பற்றியும் அறிந்து கொள்வது மிக அவசியமான ஒன்றாக உள்ளது. ஏனெனில் மதிப்பு என்பது மனிதன் வாழ்கின்ற நிலையினைப் பொறுத்தே அமைவதாகும். அத்தகைய விழுமியங்கள் பற்றிய உண்மையைக் கூறுகின்ற, கூறிக்கொண்டிருக்கிற அறிஞர்கள் பலர். அவற்றில்

"ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தை முறைகளுக்கும் எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ அவை அப்பாண்பாட்டின் விழுமியங்கள் ஆகும்." என்று பண்பாட்டு மானிடவியல் புத்தகத்தில் பக்தவத்சல பாரதி கூறுகிறார் (Bakthavathsala Bharathi, 1990).

சேதுமணியன் எழுதிய "தமிழ் நாவல்களின் மதிப்புகள்" புத்தகத்தில், "விழுமியம் என்றாலே அது சிறந்ததை மட்டுமே குறிக்கும். சிறந்ததல்லாத எதுவும் விழுமியம் என்ற சொல்லின் பொருளாட்சிக்குள் வராது" என்று உரைக்கின்றார் (Sethumaniyan, 1992). நாம் உருவாக்கும் செயல்களானது பிறர் பின்பற்றி தன்னைத் தானே மாற்றிக்கொண்டு நடைமுறைப்படுத்துவதே விழுமியமாகும். இந்த உலகத்தில் சிறந்த ஒன்றிற்கே அதிக முக்கியத்துவம் உள்ளது. எனவே சிறந்ததை மட்டுமே பின்பற்றி அதன்படி வாழ்தல் மிக அவசியமாகும்.

## வண்ணதாசன் பார்வையில் விழுமியங்கள்

வண்ணதாசனின் படைப்புகளில் மனித மதிப்பீடுகளுக்குக் குறைவில்லை. இயல்பாகவே அனைத்து விதமான மனிதர்களையும் காட்சிமைப்படுத்தியுள்ளார். கோபமான நிமிடங்களாக இருந்தாலும் சரி, மகிழ்ச்சியான தருணங்களாக இருந்தாலும் சரி அதை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் சில நேரங்களில் நாம் எதை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துகிறோமோ அதுவே நமக்கு வந்தடையும். அது நேர்மறையான விளைவாயினும் எதிர்மறையான விளைவாயினும் நாம் செயல்படுவதைப் பொறுத்தே அனைத்தும் அமையும் என்பதை வண்ணதாசன் படைப்பின்; மூலம் அறிந்திட முடியும்.

"வண்ணதாசன் "சின்ன விஷயங்களில் மனிதன்" புத்தகத்தின் நேர்காணல் பகுதியில், "கோபம் என்றாலும் சந்தோஷம் என்றாலும் மறைக்கத்தெரியாது. நான் கோபத்தில் வீசி எந்தக் கண்ணாடிப் பாத்திரமும் உடைந்திருக்காது. நான் மிதித்து எந்தக் குஞ்சும் நசுங்கியதில்லை. எனக்கும் பசி, கோபம், காமம், அழுகை எல்லாம் ஆதார உணர்வுகள். என் உப்பு, என் சுரணை அவை." என்று கூறியிருக்கிறார் (Vannadasan, 2014). இதன் மூலம் வண்ணதாசனின் இயல்பான குணநலன் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. மனிதனாக வாழ்தல் என்பது அருமையிலும் அருமையானது. அவன் வாழும் வாழ்நாளும்

சொற்பமானதே. அத்தகைய வாழ்நாட்களில் நன்மையான காரியங்களை மட்டுமே செய்து வாழ்தல் வேண்டும்.

## எதிர்மறையில் நன்மைகள்

எதிர்மறை என்பவை பற்றிய தவறான கருத்துக்களே அதிகமாகப் பரப்பப்படுகின்றன. எதிர்மறை என்பது ஒரு செயலைச் செய்து அதன் மூலம் பெறப்பட்ட அனுபவத்தினால் கிடைக்கப்பெறும் நிலையே. இச்செயலைச் செய்ததனால் அது நடக்காது அதை செய்யவேண்டாம் என்பது யாரோ ஒருவர் செய்து பார்த்து அந்நிகழ்வின் முடிவையே நமக்குள் பகிர்ந்தளிக்கின்றார். எதிர்மறையான எண்ணங்கள் மனிதனை சரியான உடன்பாட்டைச் சிந்திக்க வழிவகை செய்கின்றது.

வண்ணதாசன் எதிர்மறையான நடைமுறைகளில் சில நற்செயல்களும் நடைபெறுகின்றன என்பதை தான் படைத்த "நாபிக்கமலம்" புத்தகத்தில், "எல்லாத் தடைகளையும் தாண்டத் தாண்ட மனதும் தடையற்றதாகி விடுகிறது. அப்படியே தடைகள் இருப்பினும் அட இதைத்தாண்டினால் தான் என்ன என்றும் தோன்றுகிறது. இலைவற்றி இலை பழுத்து நிற்கையில் சற்று உள்பக்கம் சுருண்டு, அதன் பின்பக்கம் தெரிவதில்லையா, அப்படி முன்பக்கம் புடைத்துத் தெரியாத நரம்பெல்லாம் சருகின் பின் பக்கத்தில் தானே தெரிக்கின்றன. ஆ! இந்த பின்பக்கம் புடைத்த நரம்புகள் தான் எத்தனை அழகு!" என்று குறிப்பிடுவதை அறியும் பொழுது இலையானது பசுமையாக இருக்கும் பொழுது தெரியாத அழகு இலை சுருண்டு பழுத்தவுடன் அதன் நரம்புகள் தெரிகின்ற அழகான காட்சியை நமக்குக் காட்டுகின்றார் (Vannadasan, 2016a). இவ்வாறு காய்ந்த இலையில் காட்சிப்பொருளைக் காட்டியுள்ள வண்ணதாசன், காய்ந்து போன இலையில் தெரிகின்ற அழகைப்போல் தோல்வி என்னும் எதிர்மறை விழுமியங்களின் மூலமே வெற்றி என்னும் உடன்பாட்டு விழுமியங்களைப் பெற முடிகின்றது. தடைகள் ஏற்படுவதால் தான் நாம் அதிகமாக சிந்தனை செய்து தடையங்களுக்கான வழித்தடங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் அமையும் என்பதை நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

வெற்றியை நோக்கி நடைதொடர வேணுமாயின் அதைச் சார்ந்த எதிர்பார்ப்பு மிக அவசியம். அதுவே நமக்கு முழு பலனைத்தரும். மாற்றங்களைச் செய்ய வேண்டுமாயின் நம்மிடமிருந்தே தொடரவேண்டும். சிலவை நல்லதாக இருக்கும் என்று அறிந்தாலும் கூட அத்தகைய மாற்றங்களை நம் மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இவ்வாறு இந்த வாய்ப்பைத் தவற விடுகிறோம் என்றால் நமக்கான வெற்றியை இழக்கிறோம் என்றே அர்த்தமாகும்.

ஒரு விஷயத்தில் தோல்வியடைந்தால் அந்தத் தோல்விக்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். அதை நிவர்த்தி செய்து வெற்றிக்கான தடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். எனக்கு எதுவும் தெரியாது, நேரம் இல்லை என்று காரணத்தைத் தேடிக்கொண்டே விஷயத்தைச் செய்யாமல் இருந்தால் மாற்றத்தைக் காண முடியாது.

வண்ணதாசன் "கிருஷ்ணன் வைத்த வீடு" சிறுகதைப் பகுதியில், "எல்லா இடத்திலும் இருக்கவும், எல்லா இடத்திலும் வாழவும் விரும்புகிற அதே மனம், இன்னொரு விதத்தில் ஒரே இடத்தில் இருக்க விரும்புகிறது என்பதும், எல்லா இடத்திலும் வாழ முடியாது தவிக்கிறது என்பதும் நிஜம்" என்கிறார் (Vannadasan, 2015). இதில் மனித மனநிலையைச் சுட்டிக் காட்டுகிறார். மகிழ்ச்சிக்கு உடன்பாடான சூழல்களை மட்டுமே நம்மால் ஏற்றுக் கொள்ள முடியும். எதிர்மறையான நிலையில் நம் மனம் செல்லாது. இடத்திற்கு ஏற்ப நம் மனநிலைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். மனமானது புதிது புதிதாகச் சிந்தித்துக் கொண்டே இருப்பதால் மாற்றங்களும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் என்பதும் மாற்ற முடியாத உண்மையாகும்.

## தீராத முயற்சியும் முடிவும்

வாழ்க்கையில் நாம் வெற்றியைப் பெறுவதும் சாதனைகள் புரிவதும் மனநிலையைப் பொறுத்து அமைவது. வெற்றிக்கான வழி அயராத உழைப்பும், ஈடுபாடும் தான் நம் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறுவது இல்லை. விடாமுயற்சியே விஸ்வரூப வெற்றியாகும். விடாமுயற்சியுடன்


IOR PRESS

கிடைக்கும் வெற்றியை விடாது பிடித்துக் கொண்டு முன்னேறியவர்கள் இவ்வுலகில் ஏராளம். முயற்சியும் உள்ள உறுதியுமே ஒருவரை உயரத்திற்கு அழைத்துச் செல்லும். சரியான படிப்போ, திறமையோ இல்லாதவர்கள்கூட முயற்சி செய்தே வெற்றி கண்டுகொண்டிருக்கின்றனர்.

நாம் எங்கு சென்றாலும் அந்த சூழலுக்கேற்ப வாழ்ந்துவரும் பண்பைப் பெற்றுக்கொண்டு தனித்துவப் பண்புகளைப் போற்றித் தமிழ்ச்சால்பையும் வாழ்வியல் விழுமியங்களையும் கைவிடாது வாழ்ந்துவரும் நெறிமுறை தமிழர்களிடம் உண்டு. அதனை நம் சந்ததியினருக்கு தரவேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளது. முன்னோர்கள் கூறிய ஒழுக்க விழுமியங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் பின்பற்றி வந்தாலே போதும் அவை என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும்.

வண்ணதாசன் “நாபிக்கமலம்” புத்தகத்தில் மனித வாழ்வின் காலங்கள் பற்றி எடுத்துரைக்கிறார். நாம் வாழ்வது ஒருமுறை மட்டும் தான் அவ்வாழ்வு பிறருக்கு அனுபவத்தைத் தரும்படியாக அமைதல் வேண்டும் என்பதை,

“நான் யாருக்கும் ஆசிரியன் அல்லன். ஆனால், அதே சமயம் எல்லோருக்கும் மாணாக்கன், என் கதைகள் பாடங்கள் அல்ல, ஆனால் எல்லாம் என்னால் படிக்கப்பட்டவையே. ஒரு மனிதனின் வாழ்வில் பல மனிதர்களின் அனுபவங்களை வாழ்கிற சாத்தியங்களை எழுத்தும் வாசிப்புமே தர வல்லனவாய் இருக்கின்றன. இன்று நீர்த்துப் போயிருக்கிற வாழ்வு அதன் எல்லா அடர்த்திகளுடன் பதிவு செய்யப்பட்டிருக்கிற ஆவணங்களாகப் புத்தகங்களே இருக்க முடியும். இன்னொரு புத்தகம் இன்னொரு ஜென்மம் தரும். ஆயிரம் ஜன்மங்களின் அற்புதக் கிரகணங்களுடன் எழுதுகிறவன் மேலும் சென்று கொண்டே இருக்கலாம்.” என்று எடுத்துக் காட்டுகின்றார் (Vannadasan, 2016a). மனிதன் பின்பற்றுகின்ற வாழ்வானது நம் முன்னே வாழ்ந்து முடித்த மனிதர்களின் வெற்றியைப் பொறுத்தே பின்பற்றப்படுகின்றது. இவ்வுலகில் ஒருவர் அனுபவத்தின் மூலம் கற்கும் பாடமே சிறந்த கல்வியாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

வாழ்க்கை கற்றுக்கொடுக்கும் அனுபவம், நாம் கற்றுக்கொள்வதையும் பெற்றுக்கொடுக்கும். அனுபவம் முதிர்ச்சியின் அடையாளம். அனுபவசாலிகள் என்றும் புலம்பலை மறந்து புத்திசாலிகளாக இருப்பார்கள். தேவையானதை தேவையில்லாத நேரத்தில் வாங்கினால் தேவையானதை விற்க வேண்டிவரும் என்று கற்றுத்தருவது ஆசான் அனுபவமே. பேச வேண்டிய நேரத்தில் எங்கு, எதை, எப்படிப் பேசவேண்டும் என்று உள்ளத்திற்கு உணர்த்தும் உள்ளுணர்வே அனுபவம்.

ஆயிரம் ஆசிரியர்களால் கற்றுக்கொடுக்க முடியாத பாடத்தை ஒரே நாளில் நாம் பெறும் அனுபவம் கற்றுத்தந்து விடுகிறது. தோல்விகளில் நாம் பெறும் அனுபவமே சிறந்தது என்பதை மனதில் இருத்திச் செயல்பட வேண்டும்.

வண்ணதாசன் “கிருஷ்ணன் வைத்த வீடு” சிறுகதைப் பகுதியில், “சில சமயம் இப்படிச் சொல்லிக்கொண்டும், சிலசமயம் சொல்லிக் கொள்ளாமலும் வெளியே வர வேண்டியதாகிறது. வெளியே வந்த பிறகு மறுபடி உள்ளே போகவும் தோன்றுகிறது. உள்ளே மறுபடி போக அனுமதி மறுக்கப்படுவதும், உள்ளே போயின் வெளியேற மறுக்கப்படும் இடங்களும் தான் மறுபடி மறுபடி நம்மை அழைத்துக் கொண்டே இருக்கின்றன. பெரும்பாலும் அது துக்கத்தின் அழைப்பாகவே இருக்கிறது என்பதும் உண்மை. வாழ்வு சந்தோஷத்தின் அழைப்புகளுக்குக் காது கொடுக்கிறது.” என்று கூறுகிறார் (Vannadasan, 2015). சில நேரங்களில் உடன்பாடான விஷயங்களும் எதிர்மறையான சூழ்நிலைகளும் மாறிமாறித் தோன்றிய வண்ணமே இருக்கிறது. மகிழ்ச்சிக்கு மத்தியில் துன்பத்தைக் காண்பதும், துன்பத்திற்கு மத்தியில் இன்பத்தைக் காண்பதும் இயற்கையே. அழகாய்ப் பார்த்து ரசித்த இடங்களில் சில நேரங்களில் அழிவைக் கண்டு பயம் கொள்வதும் சூழலே. எந்தக்காரியத்தை நாம் எடுத்துக் கொண்டு செய்தாலும் அதனை நன்கு முடித்துவிட வேண்டும். வாய்ப்புகள் உண்டாகும் நேரத்தில் அதைப் பயன்படுத்தி வெற்றியடைந்துவிட வேண்டும் இதற்கு உலகியல் முறைகளை அறிந்து பயனடைதல் வேண்டும்.

வண்ணதாசன் “சில இறகுகள் சில பறவைகள்” சிறுகதையில் மனித நம்பிக்கையின் ஆழத்தை விவரிக்கிறார். விழுமியங்களை பின்பற்றி வாழ்க்கையின் அடுத்த பாதைக்குச் செல்வதால் ஏற்படும்

மகிழ்ச்சியை, "சுயவெறுப்பும், பச்சாதாபமும் ஒரு தப்பும் செய்யாத நமக்கேன் இந்தத் துன்பம் என்ற கேள்வியும் திரும்பத் திரும்பத் துரத்தி இதுவரை நமக்கிருந்த சில அடிப்படை நம்பிக்கைகளைத் தகர்க்க முற்படும். மேலும் எதையும் தகர்ந்து போக அனுமதிக்காது இருங்கள். ஒரு காகிதம் போல மிகச் சுலபமாக பறந்து போக முடியாதபடியான சீருடனும் சீர்குலைவுடனும் வாழ்வெனும் மேஜை இருக்கிறது. ஏதோ ஓர் கவலையின் அல்லது சந்தோசத்தின் கூழாங்கல் நம்மை மேஜையிலேயே வைத்திருக்கிறது. ஒரு பெரும் சூறை அல்லது நிலநடுக்கம் வந்தால் ஒழிய, நம் காகிதங்கள் இடம் பெயர்வதே இல்லை." என்று குறிப்பிடுகின்றார் (Vannadasan, 2016b). எதிர்மறையான விஷயங்கள் நம்மை ஆட்கொள்ளாமல் நம்மை எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும் என்றும், நாகரிகத்தின் வளர்ச்சியானது நாகரிகமான முறையில்; வளர்ச்சியடைவதற்குப் பதிலாகத் திசைமாறி விரும்பத்தகாத விஷயங்களில் மாற்றம் கண்டு கொண்டுள்ளமையையும் குறிப்பிடுகிறார். இதனால் சமூகச்சூழலும், பழக்க வழக்கங்களும் தனிநபர் மற்றும் சமூக விழுமியங்களை மாசுபடுத்திக் கொண்டிருக்கின்றன. எதிர்காலமானது ஆரோக்கியமானதாகவும் வளமிக்கதாகவும் மாற்றப்பட வேண்டுமாயின் விழுமிய ஒழுக்க நெறிகளுடனான வாழ்க்கை முறையை ஏற்படுத்த வேண்டும் நம் எண்ணத்தையும் குடும்பச் சூழலையும் ஆரோக்கியமாக வழிகாட்டல் கொண்டதாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

மனித வாழ்வை மேம்படுத்தும் மற்றும் கடைபிடிக்கப்படும் பெறுமதிப்புமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியங்கள். தன்னம்பிக்கையை வளர்க்கக்கூடிய வழி நம்மிடம் மட்டுமே உள்ளது. என்னால் இதைச் செய்ய முடியும் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். அதோடு முயற்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு நேரத்தைப் பயன்படுத்த வேண்டும். தன்னம்பிக்கையும் முயற்சியும் என்றும் தோல்வியடைவதில்லை. நம்பினோர்க்கு இயற்கை நலமே செய்யும். முடியாது என்ற வார்த்தையை நம் அகராதியில் இருந்து நீக்கிவிட வேண்டும் முயற்சி செய்து வெற்றி கண்டவர்களின் வழியைப் பின்பற்றி தன்னம்பிக்கையுடன் வாழ்வில் வெற்றிபெற வேண்டும்.

## முடிவுரை

எனவே எதிர்மறையான நிகழ்வுகளே மனிதனுக்கு உண்மையான வாழ்க்கையை எடுத்துக்காட்டும் கண்ணாடியாக செயல்படுகின்றது என்பதையும் எதிர்மறை என்று நினைத்து ஒதுக்கிவிடாமல் அதில் பெறும் அனுபவத்தைக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான வழித்தடங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுமே வண்ணதாசன் வழி அறியப்படுகின்ற உண்மையாக இருக்கின்றது. தோல்விகளைக் கண்ட மனிதனே வெற்றிக்கான சிறந்த பாதையினைத் தேர்ந்தெடுக்க முடியும். அனுபவமே இவ்வளர்ச்சிக்கு காரணமாக அமைவதையும் உலக மக்களின் பண்பிற்கு வலுவூட்டும் வகையில் அமைந்துள்ள விழுமியங்களே வாழ்விற்கு வழிகாட்டும். வெற்றியும், தோல்வியும் நாம் நிர்ணயிப்பதே என்ற உயர்ந்த கொள்கைகளை இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகின்றது.

# References


Bakthavathsala Bharathi, (1990) Panpaattu Manudaviyal, Manivasagar Pathipagam, Chennai, India

Sethumaniyan, (1992) Tamil Navalkalin Mathipugal, Second Edition, Senbagam Pathipagam, Madurai, India

Vannadasan, (2014) Chinna Visayangalil Manithan, Santhiya Pathipagam, Chennai, India

Vannadasan, (2015) Krishnan Vaitha Veedu, Santhiya Pathipagam, Chennai, India

Vannadasan, (2016a) Nabic kamalam, Santhiya Pathipagam, Chennai, India

Vannadasan, (2016b) Sila Iragugal Sila Paravaigal, Santhiya Pathipagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License